

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர், வழக்கறிஞர் எஸ். சுகன்யா தனது வேட்பு மனுவினை தேர்தல் நடத்தும் அலுவலர் ஆ.பெலிக்ஸ் ராஜாவிடம் வழங்கினார். இதில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், மாவட்ட கழகச் செயலாளர் இல.பத்மநாபன், கழக மகளிர் அணி துணை செயலாளர் முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் உள்ளனர்.

### திராவிட வெற்றிக் கழகம் சார்பில்

# திருச்சியில் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா சிலைகளுக்கு மரியாதை!

## மல்லை சி.ஏ.சத்யா தலைமையில் மாலை அணிவிப்பு!



திருச்சி, செப். 16 - செப்டம்பர் 15 செவ்வாய்க்கிழமை திருச்சி மாநகர் மன்னார்புரம் ஜமால் முகமது கல்லூரி வளாகம் VSM மகாலில் திராவிட வெற்றிக் கழகம் முன்னெடுக்கும் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்தநாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாள், திராவிட ரத்னா விருதுகள் வழங்கும் முப்பெரும் விழா நடைபெற்றது.

மாலை 5 மணியளவில் திராவிட இயக்க செயல்பாட்டாளர்கள் 9 ஒன்பது பேர்களுக்கு திராவிட ரத்னா விருதுகள் வழங்கப்பட்டது.

நேற்று (15.09.2026 செவ்வாய்க் கிழமை) காலை 9 மணியளவில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கும் திருச்சி சிந்தாமணியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கும் திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் திராவிட வெற்றிக் கழகம் தலைவர் மல்லை சி.ஏ. சத்யா தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

### தளபதி இரத்த தான இயக்கம் சார்பில்

# கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம்!

## முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைக்கிறார்! நா.கார்த்திக் – துரை.செந்தமிழ்ச் செல்வன் பங்கேற்பு!

கோவை, செப். 16 - கோவை தளபதி இரத்த தான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம் 19.9.2026 - சனிக்கிழமை காலை 8 மணி முதல் மதியம் ஒரு மணி வரை கோவை வரதராஜபுரம் சாய் விவாகா மஹாலில் நடைபெறுகிறது.

இம்முகாமை முன்னாள் அமைச்சர், கோவை மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைக்கிறார்.

இம்முகாமிற்கு கழக மாநில தீர்மானக் குழு செயலாளர் நா.கார்த்திக் தலைமை வகிக்கிறார்.

கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் வாழ்த்துரை வழங்குகிறார்.

மேலும் இம்முகாமில் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி., கழக சொத்து பாதுகாப்புக் குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிசாமி, கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், தலைமைக் கழகப் பிரதிநிதி எஸ்.ஆர். பார்த்திபன், தலைமைக் கழகப் பிரதிநிதி ரேகா பிரியதர்ஷினி, கழக பொதுக் குழு உறுப்பினர் இரா. மணிகண்டன், சிங்கா நல்லூர் பகுதிக் கழகப் பொறுப்பாளர் சிங்கை மு.சிவா எம்.சி., 60வது வட்டக் கழகப் பொறுப்பாளர் செம்மொழி முருகானந்தம், 60 (அ) வட்டக் கழக பொறுப்பாளர் வே.ஜெயராம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இம்முகாமில் அனைத்துக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல் வீரர்கள், மாணவ - மாணவிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிறைவாக தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்ரமணியன் நன்றி கூறுகிறார்.

### அனீபா ஏற்பாட்டில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் நிறைவு விழா!

தஞ்சாவூர், செப்.16 - தஞ்சை வடக்கு மாவட்டம் பாபநாசம் பேரூந்து நிறுத்தத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தொடர்ந்து 103 நாட்கள் பொது மக்களுக்கு உணவு மற்றும் நலத் திட்டங்கள் வழங்கும் நிகழ்வின் நிறைவு நாள் விழா நடைபெற்றது.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் அணி சார்பாக மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் அவர்களின் வழிகாட்டுதலோடு சிறுபான்மையினர் அணி மாநில செயலாளர் மரு.சுபர்கான் ஆலோசனைக்கிணங்க மாவட்ட அமைப்பாளர் பாவை அனீபா ஏற்பாட்டில் 103 நாட்கள் தொடர் நிகழ்வாக மக்களுக்கான நலத் திட்ட உதவிகள், மதிய உணவு மற்றும் தினந்தோறும் குளிர் பானங்கள் வழங்கி வந்தனர் 13.09.2026 அன்று 103வது நாள் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பொது மக்களுக்கு கருப்பு சிகப்பு வண்ணத்தில் 103 குடைகள், 103 சிக்கன் பிரியாணி, 103 வெஜ் பிரியாணி, 103 மரக்கன்றுகள், 103 கடலை மிட்டாய்கள், 103 பக்கெட்கள், மற்றும் இனிப்புகள் உள்ளிட்டவைகள் வழங்கினார்கள். விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ரெங்கசாமி, பாபநாசம் வடக்கு ஒன்றியச்செயலாளர் கோ.தாமரைச்செல்வன், தெற்கு ஒன்றிய செயலாளர் என். நாசர், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.துரைமுருகன், பேரூர் செயலாளர் ச.கபிலன், துணை செயலாளர் உதயா, வழக்கறிஞர் இளையராஜா, சரண், அறிவழகன், மற்றும் மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர் விழா ஏற்பாடுகளை பாவை அனீபா மற்றும் பி.கணேஷ், எஸ்.ஜெ. சுரேஷ், வீரமணி, எம்.சிந்திக், தீபன், அக்கீம் அலி, அருணாஷ், சரத் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை கிட்டப்பாஅங்காடி அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். சங்கரநாராயணன், ஹர்ஷத் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணம் கிழக்கு மேற்கு மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் தாராசுரம் பகுதியில் அமைந்துள்ள பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க அன்பழகன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கழக சட்டதிட்டத் திருத்தக் குழு உறுப்பினர் சு கல்யாணசுந்தரம் எம்பி, மாநகர கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துசெல்வம், ஜெ.சுதாகர் பொதுக்குழு உறுப்பினர் இரா.அசோக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம் மொடக்குறிச்சி அன்பகம் உதயம் அலுவலகத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட பா.ஜ.க. செயலாளர் (ஒ.பி.சி.) பாலன் தனது பா.ஜ.க. உறுப்பினர் அட்டையை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினரும், கழக இளைஞரணி துணைச் செயலாளருமான கே.இ.பிரகாஷிடம் ஒப்படைத்து விட்டு தி.மு.கழகத்தில் இணைந்தார். நிகழ்வில் மொடக்குறிச்சி பேரூர் கழக செயலாளர் பி.வி.சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட சார்பாக மாவட்ட செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் தலைமையில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து, பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி,சாவித்திரி, சந்திரன் பொருளாளர் கதிரவன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன் ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன்,மகேந்திரன் நாராயணன், தேங்காய்.சுப்பிரமணி, சரவணன், சாந்தமூர்த்தி, குண.வசந்தரசு,பேரூர் கழக செயலாளர் தம்பிதுரை , வழக்கறிஞர் விஸ்வபாரதி, முன்னாள் நகர செயலாளர் நவாப், முன்னாள் நகர மன்ற தலைவர் பரிதா நவாப், காவேரிப்பட்டணம் பேரூராட்சித் தலைவர் அம்சவேணி செந்தில் குமார், அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன், ஜெயேந்திரன், சாஜித் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




'கடமை! கண்ணியம்!! கட்டுப்பாடு!!! எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர், "பேரறிஞர் பெருந்தகை, "அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக அலுவலகத்தில் "பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகளை ஒன்றிய கழக செயலாளர் டாக்டர்.வே. செழியன் வழங்கினார். நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் பத்திரம் மனோகரன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் புங்கவாடி ராஜவேல், ஆத்தூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அருண்குமார், மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் நல்லம்மாள், மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் கல்லை ராஜேந்திரன், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அசோக் குமார், ஒன்றிய நிர்வாகிகள் நடராஜன், வேல்முருகன், சிவகுமார், இளங்கோ, பிரபாகரன், வீராசாமி, பழனிவேல், சத்யராஜ்,மாது, கண்ணன், காளிமுத்து, ரஞ்சித்குமார், செல்லமுத்து, ரங்கநாதன், ஆட்டோ பிரபு, விஸ்வநாதன், ராமர், அண்ணாதுரை, மோகன்ராஜ், அப்பம்ம சமுத்திரம் கரைக்காரர் செல்லபெருமாள், பன்னீர்செல்வம், மணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் மல்லூர் பேரூர் கழக தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 118 வது பிறந்த தினத்தையொட்டி பேரூர் கழக செயலாளர் என்.சுரேந்திரன் தலைமையில் பேரறிஞர் அண்ணாவின் படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கினார். உடன் பேரூர் கழக நிர்வாகிகள் இருந்தனர்.